மாகாண கல்வித் திணைக்களம் சபரகமுவ – வாராந்தப் பாடசாலை

விடயம் : வரலாறு

இறுதிக் கணிப்பீடு

தரம் :06

தயாரிப்பு : மாவனல்லை வலயம்

இலக்கம் 01 – 05 உள்ள வினாக்களில் காணப்படும் இடைவெளிகளை பொருத்தமான சொல்லை வைத்து நிரப்புக.

01. ..... உங்கள் பாடசாலையின் வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் ஒரு இலக்கிய மூலாதாரம் ஆகும்.
02. பூமியில் முதலில் தோன்றிய உயிரினம் ..... ஆகும்.
03. விஜயன் உட்பட 700 தோழர்களும் .....என அழைக்கப்படுகின்றனர்.
04. நகரம் ஒன்றில் அருகில் முதன் முதலாக குளம் ஒன்று அமைக்கப்பட்டது ..... மன்னனால் ஆகும்.
05. சத்தாதிஸ்ஸ மன்னன் பொருளாதாரத்தை வளப்படுத்துவதற்காக விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டது ..... என்ற பிரதேசத்திலாகும்.

சுருக்கமாக விடை தருக.

01. வரலாற்றைக் கற்பதன் பயன்கள் 5ஐக் குறிப்பிடுக.
02. மனிதன் ஏனைய விலங்குகளை விட முன்னேற்றம் அடைந்தவன் என்பதற்கான காரணங்கள் 2ஐக் குறிப்பிடுக.
03. எமது மூதாதையர்கள் வாழ்ந்த கற்குகைகள் அமைந்திருந்த இடங்கள் 2ஐக் குறிப்பிடுக.
04. துட்டகைமுனு மன்னன் பௌத்த சமயத்திற்கு ஆற்றிய சேவைகளைக் குறிப்பிடுக.
05. வசப மன்னன் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்காக நிர்மாணித்த குளங்கள் மூன்று தருக.